-----------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்கல பல்லேகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லக்கல பல்லேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 340,400 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | -மேற்படி- |
| (ஆ) முன்னைய ஆண்டில் பட்டியலிடப்பட்டவையாக இனங்காணப்படாத மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 473,520 ஆகவிருந்த முத்திரைக் கட்டண வருமானம் திரண்ட நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படாது வருமான கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று மீதிப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிலையான சொத்து மீதி ரூபா. 64,842,871 ஆகவிருந்ததுடன் மூலதன ஈடுபாட்டுக்கான வருமானத்தின் மூலமும் நன்கொடைகளின் மூலமும் பங்களிப்புச் செய்யும் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா. 60,765,733 ஆகவிருந்ததன் காரணமாக ரூபா. 4,077,098 வித்தியாசம் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) 2021ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட 05 கிராமிய வீதி திட்டங்களுடன் தொடர்பான கையிருப்புத் தொகை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சினால் மீளாய்வாண்டின் திசம்பர் மாதம் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் அத் தொகையாகிய ரூபா. 652,961 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் திட்டத்தின் மூலம் பெறப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா. 180,000 ஆகவிருந்த 02 துவிச்சக்கர வுண்டிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் |
| (ஊ) பிடவல சுற்றுலா விடுதிக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்பட்டிருந்த ரூபா. 2,946,860 மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 329,592 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள், ரூபா. 950,196 என மூலதனப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 620,604 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டினுள் ரூபா. 71,380 முற்பணத் தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் மீளச் செலுத்தப்படாத முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | --------------------------------- | ---------------- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 15 கணக்குகளின் மீதிகளை அவற்றுடன் தொடர்பான பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்யும் பொழுது ரூபா. 24,644,940 இணக்கமின்மை காணப்பட்டது. | அட்டவணைகளில் பிழைகள் காணப்படுவதுடன் அவற்றை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இணக்கமின்மைக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு அவை சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 <u>தொங்கல் கணக்கு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | --------------------------------- | ---------------- |
| மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியன்று காணப்பட்ட ரூபா. 2,241,938 ஆகிய தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டுள்ளதுடன் வேறுபாட்டைக் கண்டறிவதற்கான ஆவணங்கள் காணப்படவில்லை என்பதாக | மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

**1.6.4 <u>கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 18,892,348 ஆகவிருந்த 09 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா. 70,489 ஆகவிருந்த ஒரு பொறுப்பு மீதி ஆகியவற்றுடன் தொடர்பான பதிவேடுகள், கோவைகள் மற்றும் பட்டியல்கள் சமர்ப்பிக்கப் படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது | விடயங்கள் தொடர்பான புத்தகங்கள் மூலம் அம் மீதிகள் வெளிப்படாததன் காரணமாக அட்டவணைகளை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக | கணக்கு மீதிகளுடன் தொடர்பான பதிவேடுகள், கோவைகள் மற்றும் பட்டியல்கள் ஆகியன தயாரிக்கப்படல் வேண்டும் |

**1.7 <u>இணக்கமின்மைகள்</u>**

**1.7.1 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்</u>**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் உடலில் அரச இலட்சினை பொறிக்கப் பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல் வேண்டும் |
| (ஆ) 2016 திசம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான ஓடும் நிலையில் உள்ள 02 வாகனங்களின் எரிபொருள் விரயம் 02 வருட காலமாக பரிசீலிக்கப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் விரயத்தினை பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டில் சீர் செய்வதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல் வேண்டும் |

## 02. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 861,470ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 871,619 ஆக இருந்தது.

### 2.2 <u>வருமான நிர்வாகம்</u>

#### 2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 781,500 | 585,373 | 605,048 | 280,875 | 536,000 | 551,165 | 467,145 | 300,550 |
| (ii) | வாடகை | 4,709,800 | 844,209 | 854,740 | 723,020 | 3,902,440 | 1,231,131 | 1,205,735 | 733,551 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 218,000 | 279,960 | 279,960 | 21,750 | 328,000 | 67,700 | 67,700 | 21,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,376,677 | 5,670,348 | 5,155,518 | 4,757,583 | 3,022,300 | 2,527,175 | 2,183,648 | 4,242,753 |
| | | 15,085,977 | 7,379,890 | 6,895,266 | 5,783,228 | 7,788,740 | 4,377,171 | 3,924,228 | 5,298,604 |

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வாடகை** | | |
| | வாராந்த சந்தை கடையொன்றின் வாடகைதாரரிடமிருந்து 2021 திசம்பர் முதல் முன்னைய வருடத்தின் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியுடன் தொடர்பான ரூபா. 50,925 ஆகவிருந்த நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பழைய கேள்விதாரருக்கு வேண்டிய கடையை வழங்குவதாக அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | **வேறு வருமானங்கள்** | | |
| (I) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நீர் வருமானம் ரூபா. 466,200 ஆகவிருந்ததுடன் அதில் ரூபா. 111,112 நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட 57 வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக இருந்தது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (II) | லக்கல பழைய வைத்தியசாலையின் விடுதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா. 161,523 அறவிடப்பட்டிருக்கவில்லை. | விபரங்களை மாவட்ட சகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்ட | ஊதியத்திலிருந்து பகுதிபகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை | உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில் கடமை கொடுப்பனவுக்கு மேலதிகமாக அலுவலகத்திற்கு வருவதற்கான போக்குவரத்து செலவு இணைந்த படி கொடுப்பனவாக 2019 செப்டம்பர் முதல் 2022 ஜூலை காலப்பகுதிக்காக ரூபா. 146,101 செலுத்தப்பட்டிருந்தது. | எடுப்பதாக | வேண்டும் |

3.2 <u>முகாமைத்துவ வினைத்திறனின்மை</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விசேட தேவையுடைய கிராம வேலைத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டு முதல் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கிவுலவாடிய நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் 110 பயனாளிகளுக்கு நீரை வழங்குவதற்கு உத்தேசித்திருந்த போதும், 2022 நவம்பர் 02 ஆம் திகதியளவில் அதன் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டு ரூபா. 2,377,539 செலவிடப்பட்டிருந்தது. அதன் மூலம் 12 பயனாளிகளுக்கு நீரை வழங்க முடியுமாக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் பயனாளிகள் ஒருவரும் நீர் இணைப்பிற்காக விண்ணப்பித்திருக்கவில்லை. இதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்ட ரூபா. 2,377,539 பயனற்ற செலவினமாக அமைந்திருந்தது. | கிரயம் அதிகரித்துச் செல்லல் காரணமாக கூடுதலான பயனாளிகள் உள்ள இடங்களுக்கு நீர்க்குழாய்களை பொருத்துவதற்கு முடியாமல் போனதால் நீர் இணைப்புகளை வழங்க முடியாமல் போனதாக | கூடுதலான பயனாளிகளுக்கு குடிநீரை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று பெற வேண்டிய 12 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா. 12,374,008 ஆகவிருந்ததுடன் அதில் 01 முதல் 03 வருடகால இடைவெளிக்குட்பட்ட | நிலுவை மீதிகள் தொடர்பான விபரங்கள் பேணப்படாமை காரணமாக அறவிடுவதற்கான | மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 990,423 மற்றும் 05 வருடங்களுக்கு முன்பிருந்து காணப்பட்டு வந்த தொகையாகிய ரூபா. 11,383,585 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சாத்தியம் இல்லாது இருப்பதாக | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா. 8,316,598 ஆகவிருந்ததுடன் அதில் 03 முதல் 05 வருடகால இடைவெளிக்குட்பட்ட ரூபா. 743,808 மற்றும் 05 வருடங்களுக்கு முன்பிருந்து காணப்பட்டு வந்த ரூபா. 7,572,790 தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் மீதிகளுடன் தொடர்பான தகவல்கள் போதாமையினால் தீர்ப்பதற்கான தேவை இல்லை என்பதாக | மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க 19 வியாபார நிறுவனங்களுக்கு சுற்றாடலல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாத நிலையில் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக ரூபா. 85,500 வருமானம் கிடைக்கப்பெறாதிருந்தது. | அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியினுள் 85 கட்டட அபிவிருத்தி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 52 விண்ணப்பங்களுக்கான அனுமதி | பின்னூட்டல் செய்வதற்கும் இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான பின்னூட்டல் செய்யப்படாதிருந்ததுடன் 40 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 01 முதல் 07 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் அக் கட்டடங்கள் தொடர்பாக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பிரதேச சபையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற 07 நீர்ப்பாசனத் திட்டங்களைச் சேர்ந்த 248 நீர்ப் பாவனையாளர்களுள் 105 பாவனையாளர்களுக்கான நீர் மானிகள் பொருத்தப்படா திருந்ததுடன் நீர் பட்டியலிடப்படும் பொழுது பொருத்தமற்ற முறை பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் நீர் சுத்திகரிப்பும் இடம் பெற்றிருக்கவில்லை. | சபையின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பகுதி பகுதியாக நீர் மானிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீர் மானிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 01/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட நி.பி. 371(2) (ஆ) இன் பிரகாரம் செயற்படாது வாகனங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக 148 சந்தர்ப்பங்களில் கூட்டுப்பெறுமதி ரூபா. 1,701,213 ஆகிய தொகை ஒரு நாளைக்கு ரூபா. 7,500 முதல் ரூபா. 78,430 வரை எனும் வரையரையினுள் ஒரு ஊழியருக்கு தொடர்ச்சியாக செயல் நிமித்த கட்டு நிதி முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 15 செயல் நிமித்த கட்டுநிதிகள் 16 முதல் 30 நாட்கள் வரையான கால தாமதத்துடன் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் எரிபொருள் விலைகோரலின் மூலம் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | எரிபொருள் விலைகோரல் முறையின் மூலம் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 <u>விளைவுற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட ரூபா. 8,197,144 ஆகவிருந்த 05 சொத்து அலகுகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 15 சொத்து அலகுகள் 01 முதல் 08 வருட காலமாக பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாடு கொண்ட நிலையில் காணப்பட்டன. | கடைகள் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசத்தில் அமைந்திருப்பதனாலும் வாகனங்கள் சேதமடைந்திருந்ததனாலும் குறைபயன்பாட்டுக்கு உட்பட்டிருந்தன. கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்களை திருத்தம் செய்து பாவனைக்கு எடுப்பதாக. | திருத்தம் செய்து பாவிக்கக்கூடிய சொத்துக்களை பயன்படுத்துவதற்கோ, பயனள்ள விடயங்களுக்காக பயன்படுத்தவோ அல்லது கையகற்றவோ செய்யவோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று பிரதேச சபை பயன்படுத்தும் 66 காணிகள் மற்றும் 45 கட்டடங்களின் உரிமை பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டடங்களின் மதிப்பீட்டினைப் பெற்று கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களின் உரிமை கையேற்கப்பட ல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட 136 அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதாக | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும் |
| (இ) | பிரதேச சபை பயன்படுத்துகின்ற மயானங்கள் 27, விளையாட்டு மைதானங்கள் 02, நூலகக் கட்டடங்கள் மற்றும் காணிகள் 03 சனசமூக நிலையங்கள், விடுதிகள், முன்பள்ளிக் கட்டடங்களுடன் கூடிய காணிகள் 19 ஆகியவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மேற்படி - |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 06 பதவிகளுக்கான 08 உத்தியோகத்தர் களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | இது தொடர்பாக உயர் முகாமைத்துவத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### நிலையான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதேச சபையின் மூலம் முறையான விதத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சபையின் நிதி நிலைமை மோசமடைந்ததன் காரணமாக இலக்குகளை அடைய முடியாமல் போயுள்ளதாக | நிலையான அபிவிருத்தி இலக்குகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |